**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 248/2009**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சுப்புலட்சுமி | **Caste** | : | |
| **Father's Name** | : மாரிமுத்து | **Calling** | : | **Government school organizer** |
| **Village** | : வடமதுரை | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **47** |
| | | **Dated** | : | **26.11.2025** |

**26.11.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. சுப்புலட்சுமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2,3 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed. 1வது எதிரி இறப்பு**

**<u>சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் பழைய நீதிமன்றத்தில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 04.07.2005 அன்று கொடுத்தேன். புகார் யார் எழுதியது என்றால் எனக்கு ஞயாபகம் இல்லை. 3ம் எதிரி எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்றால் சரிதான். 3ம் எதிரி எந்த தேதியில் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் மார்ச் மாதம் 2004ம் வருடம் சொன்னார். தேதி ஞாபகம் இல்லை. எந்த இடத்தில் வைத்து சொன்னார்

என்றால் எங்கள் வீட்டில் வைத்து சொன்னார். 3ம் எதிரி என்னிடம் இருபதாயிரத்தை எங்கு வைத்து வாங்கினார் என்றால் எனது வீட்டில் வைத்து தான் வாங்கினார். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்திலிருந்து எந்த தேதியில் எனக்கு தபால் வந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை. எதிரிகள் மகேஷவரன் பழனிசாமி ஆகியோர் எனக்கு உறவினர்களா என்றால் பழனிச்சாமி என்பவர் எனக்கு பெரியப்பா முறை. பழனிச்சாமியிடம் நான் பணம் வழங்கவில்லை. அ.சா.ஆ.7, 8ல் எந்த தேதியில் என்னை வரசொல்லி எழுதி வாங்கினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை 5வது மாதம் இருக்கும். அ.சா.ஆ.6ல் எந்த தேதியில் என்னை நேரில் வரசொன்னார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.6 எனது பெயருக்கு கொடுக்கப்பட்ட ஆவணம். அ.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் மதுரை உயர்நீதிமன்றத்தில் கிளர்க் வேலை என்று எழுதப்பட்டிருந்தது. அ.சா.ஆ.3லும் மேற்சொன்னவாறு எழுதியிருந்தது என்றால் சரிதான். அ.சா.ஆ.6,7,8 ஆகிய ஆவணங்களிலும் மேற்சொன்னவாறு எழுதியிருந்தது என்றால் சரிதான். நான் 3ம் எதிரியிடம் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம்இல்லை. 3ம் எதிரி எந்த தேதியில் எந்த வங்கியின் காசோலை எனக்கு கொடுத்தார் என்றால் Indian bank காசோலை தேதி ஞாபகம் இல்லை. 3ம் எதிரி கொடுத்த காசோலை எதும் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். என் சித்தி சாரதா கொடுத்த காசோலை எந்த தேதியிட்டு எந்த வங்கிக்குரியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3 நபர்களும் சேர்ந்து ஒரே காசோலையாக கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் கேள்விப்பட்டேன். எனது பெரியப்பா மகன் சரவணன் ஐயப்பன் எனது மாமா மகன் சுந்தரராஜன் ஆகியோருக்கும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்ததததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அது சம்மந்தமாகவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி 3 நபர்களிடமும் 3ம் எதிரி வாங்கிய பணத்தை எப்போது திருப்பி தருவதாக சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்றே விசாரித்தார்கள் அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. விசாரணை வாய் வழியாக விசாரித்தார்கள்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2025.11.26 16:36:45 +0530

Judicial Magistrate No.II

Dindigul.